ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
பக்கங்கள் - 10
நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 01 | 15 - 03 - 2003 | சனிக்கிழமை | ஓசை 25

ADVANCER
கணினி நிறுவனத்தின் புதிய வகுப்புகள் யாவும் 17.03.2003 திங்கள் 3P.M அளவில் ஆரம்பமாகின்றன. MS-office (ஆர்வமுள்ள அனைவரும் தொடரலாம்) Visual basic Programming (MS-office தகுதி வாய்ந்தவர்கள் மட்டும் தொடரலாம்). தொடர்புகட்கு: நிர்வாகம்.

தமிழருக்கு சுயாட்சி அதிகாரத்தை வழங்க

# சிங்களவர்களுக்கு இறுதியான சந்தர்ப்பம்;

# தவறின் தனியரசு உருவாவதைத் தடுக்க முடியாது!

## பளை தமிழீழ வைப்பகக்கிளைத் திறப்புவிழா நிகழ்வில் அரசியல் ஆலோசகர் உரை

(அலுவலக செய்தியாளர்)

**நான் உறுதியாகச் சொல்வேன். இது இறுதியான சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்று தமிழ் மக்களுக்கு தமது தாயகத்தை, ஒரு சுயாட்சி அதிகாரமுடைய நிர்வாகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இல்லாது போனால் இன்றைய புலிகளின் நிர்வாகம் ஒரு தனியரசாக மாறுவதை எவராலும் தடுக்க முடியாது. இந்த உண்மை நிலையை உங்களுக்குக் கூறிவைக்கிறேன். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று தமிழீழ வைப்பக பளை கிளையினை திறந்து வைத்து அவர் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்: ஒரு சில மாதங்களுக்கு முன்னர் லண்டனில் இருந்து ஒரு பத்திரிகையாளர் வன்னிக்கு வந்து வன்னியை ஒரு வார காலமாக சுற்றிப் பார்த்து விட்டு ஒரு பிரபல பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். என்ன எழுதியிருந்தார் வடபுலத்தில், வட - இலங்கையில் ஏற்கனவே ஒரு தனியரசு உரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

பளை தமிழீழ வைப்பகக் கிளைத்திறப்பு விழா





## தமிழீழ வைப்பகத்தின் கிளை பளையில் நேற்று அரசியல் ஆலோசகரால் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

பளைப் பகுதியில் தமிழீழ வைப்பகத்தின் கிளை, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் தமிழீழ வைப்பகத்தின் பளைப் பணியகத்தின் மேலாளர் கியுபேட் அன்ரனி அவர்களின் தலைமையில் பகல் 10 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழ வைப்பகத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா தலைமையில் கூடிய பாதுகாப்புச்சபை பாதுகாப்பை தீவிரப்படுத்துவதென முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு நேற்று முன்தினம் கூடிய பாதுகாப்புச் சபை முடிவெடுத்துள்ளது. சனாதிபதி சந்திரிகா தலைமையில் கூடிய இக்குழு, தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளை பாதுகாப்பு படையினர் வழமைபோல் மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இதனால் நேற்று முதல் திடீர் வீதிச் சோதனைகள், சுற்றிவளைத்து சந்தேகத்திற்கு இடமானவர்களை விசாரணைக்கு உட்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

தொண்டர் ஆசிரியர்களுக்கு

## நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடக்கில் நேற்றுப் பல பேரணிகள்

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்குப் பகுதியில் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி நேற்று வன்னிப் பகுதியிலும் வவுனியா - மன்னார் மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளை, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, மடு, வவுனியா ஆகிய இடங்களில் இப் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)



கேணல் கருணா சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

கரடியனாறு பயிற்சிக் கல்லூரியில்

## பயிற்சி பெற்ற போராளிகளுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பு

அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற 49 பெண் போராளிகள் உட்பட 89 போராளிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. கரடியனாறு லெப். கேணல் பாலேந்திரா பயிற்சிக் கல்லூரியில் 2 ஆம் லெப் தரப்பயிற்சி பெற்ற இப் போராளிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் கரடியனாறு மைதானத்தில் நடைபெற்றது.

மூத்த தளபதி கேணல் கருணா, மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், தளபதி ரொபேட், மகளிர் படையணித் தளபதி நிலவினி, தளபதி ராம், தளபதி ஜிம்கெலி தாத்தா ஆகியோர் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டனர். கேணல் கருணா அவர்கள், சான்றிதழ்களையும், பட்டிகளையும் வழங்கினார். பயிற்சி பெற்ற போராளிகளின் பெற்றோரும் இந்நிகழ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சண்முகநாதன் யோகராஜன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.723410355V) தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (3020)

### தவறிவிட்டது

12-03-2003 அன்று யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்ட முகமாலை பஸ்சில் எனது அடையாள அட்டையும், (பரமானந்தன் மலர்விழி) மகளின் அடையாள அட்டையும் (பரமானந்தன் வசந்தினி) தேசிய சேமிப்பு வங்கி நிலையான வைப்புச் சான்றிதழும். மக்கள் வங்கி கூட்டுக்கணக்குப் புத்தகமும் தொலைந்துவிட்டது. இதனைக் கண்டெடுத்தோர் ஈழநாதம் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (3021)

### தவறிவிட்டது

விஜயகுமார் ஜெயதீபா என்பவருடைய அடையாள அட்டை முள்ளியவளைபஸ் அலுவலகத்திற்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தீன்சுவை வெதுப்பகம், புதுக்குடியிருப்பில் ஒப்படைக்கவும். தகவல்: க. அரிச்சந்திரவோஸ் (2804)

## தொண்டருக்காய் நாமும் தோள் கொடுப்போம்

ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவுகின்ற வேளையிலும், தொண்டர் ஆசிரியர்கள் அங்கீகரிக்கப்படாது அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படாத நிலையில் அவர்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் மாணவர்களது கல்வி, ஆசிரியர் பற்றாக்குறையினால் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

எனவே, இத்தொண்டர் ஆசிரியர்களை உள்வாங்குவதனால் மாணவர்களின் கல்வி நிலையின் மீட்சிக்காகவும் நீண்ட காலமாக கல்வி கற்பிக்கின்ற தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்திற்காகவும், இவர்கள் நடத்தும் இப்போராட்டத்திற்கு நாமும் எமது ஆதரவினை வழங்கி அவர்களுக்கு வலுவூட்டுகின்றோம்.

**- ஆற்றல் -**

கலை, சமூக செயல் முனைப்புக் குழுமம், அக்கராயன். (3022)

## பயணியர் பேருந்து சிறப்புப்பணி

புளியம்பொக்கணை கோவில் திருவிழாவை முன்னிட்டு மேற்படி சிறப்புப்பணி முழங்காவில், மல்லாவி, கிளிநொச்சி, பூநகரி, முள்ளியவளை ஆகிய இடங்களிலிருந்து 18-03-2003 ஆம் நாளில் கோவிற் பணியாக நடைபெறும் என்பதையும், வழமையாக பரந்தன்-புதுக்குடியிருப்பு வழித்தடத்தில் செல்லும் பேருந்துப் பணிகளும் குறித்த நாளில் கோவிலுக்குச் சென்று திரும்புமாறு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது என்பதையும் பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி8017)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவு நாளும்



மண்ணில் 29 - 05 - 1929

விண்ணில் 13 - 02 - 2003

**அமரர்- வேலாயுதம் சின்னத்தம்பி**

(மந்துவில், கொடிகாமம்)
தற்காலிக முகவரி - கண்டாவளை

மாசி மாதம் 13 ஆம் நாள் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 15-03-2003 இன்று கண்டாவளையில் நடைபெறும். இன்று மதியம் நடைபெறும் மதியபோசனத்திலும்,பிரார்த்தனை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு வந்து சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கியவர்களுக்கும் அனுதாபச் செய்தி, மலர் வளையங்கள் அனுப்பிய சகலருக்கும் நாம் சிரந்தாழ்த்தி நன்றி நவில்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பில்
**மகள், திருமதி பு.மகேஸ்வரி,**
கனடா.

(3023)

## தமிழீழப் போக்குவரவுக் கழக பருவகாலச்சீட்டு வழங்கல்

அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்களுக்கான பருவகால பயணச்சீட்டு பெறுபவர் குறித்த ஒரு மாதச் சீட்டை அதற்கு முந்திய மாதம் இருபத்தைந்தாம் நாளுக்கும் முப்பதாம் நாளுக்கும் இடையில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மேற்குறித்த காலத்தில் அன்றி இடைக்காலங்களில் பருவகாலச்சீட்டு வழங்கப்படமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்.

முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை
விசுவமடு.

(சி-8017)

## 4ஆம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு 23 □ 05 □ 1977

வீரச்சாவு 15 □ 03 □ 1999

**கப்டன் கீதன்**

**(தனபாலசிங்கம்- மதியரசன்)**

**கரவெட்டி மேற்கு, யாழ்ப்பாணம்**

கார்மேகம் எனக் கரிகாலன்
படை அணி சேர்ந்தாய்
கடமை கண்ணியம் கொண்டு - நீ
காலம் தனை பணி புரிந்தாய்
தேகம் தேயும் நிலவாய் - தேசம்
வேண்டும் என நீ உழைத்தாய்
உன்னதமான உனது பணியில்
உரமேறிய உனது அணியில்
உவப்புடனே நீ இருக்கையிலே
பிடித்திழுக்கவென வந்தானோ காலன்
ஈரிரண்டு வருடங்கள் கடந்ததுவோ
எமது மனம் ஆறாதப்பா உன் நினைவால்.

இந்நிகழ்வினில் கலந்து கொண்டு மதியபோசன விருந்திலும் பங்கேற்குமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

உந்தன் பிரிவால் துயருறும்
**தந்தை, தாய், சகோதரர், சகோதரிகள், மச்சான்.**

தற்போதைய முகவரி:
**இ. தனபாலசிங்கம்,**
தபாலகம் அருகாமை,
3ஆம் வட்டாரம்.முள்ளியவளை. (2803)

## தமிழீழ போக்குவரவுக் கழக நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமைகள் உடைய ஆண்பாலோர் மேற்படி பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்.**

அ. கல்வித் தகைமை:- க.பொ.த(சாதாரணம்) சுற்றிருத்தல்
ஆ. அகவை :- 23 தொடக்கம் 35 வரை
இ. உயரம் :- 05 அடி 03 அங்குலம்

**குறிப்பு**

அ. விண்ணப்ப முடிவு நாள் :- 25-03-2003
ஆ. அடிப்படை மாத ஊதியம் $\frac{4510+1000}{05\times100+05\times110}=5510.00$
இ. விண்ணப்பகாரருக்கான நேர்முகத் தேர்வு 09-04-2003, 10-04-2003 ஆகிய இரு நாட்கள் தமிழீழப் போக்குவரவுக் கழகம்- புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.
ஈ. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வி, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
உ. விண்ணப்பப் படிவங்களை புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, மல்லாவி,முழங்காவில், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8017)

## 31 ஆம் நாள் நினைவும், அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 15-02-2003 அன்று நடைபெற்ற எமது உடன் பிறப்பின் இறுதி நிகழ்வில் நேரில் கலந்து கொண்டும் இரங்கற் செய்திகளை அனுப்பியும் எமது துயரிற் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு 16-03-2003 ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி கனகபுரத்தில் நடைபெறும் (போசன) நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ந.பாண்டியனார்,
(கன்னி நிலம் பதிப்பகம்)
வெ.இளங்குமரன்,
(தமிழீழ கல்விக் கழகம்.)

கனகபுரம்,
கிளிநொச்சி.



**நடராசா வன்மீகநாதன்**

(காங்கேசன்துறை)

தோற்றம் 1950

மறைவு 14-02-2003

(சி-8016)

# பாரிய அழிவைத்தரும் ஆயுதங்களை அழிக்க ஈராக்கிற்கு காலக்கெடு நீடிப்பு

(லண்டன்)

**திங்கட்கிழமை ஐ.நா. பாதுகாப்புச் சபை மீண்டும் கூடும் போது, பாரிய அழிவைத் தரும் ஆயுதங்களை இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் ஈராக் அழிக்க வேண்டும் என்ற கால எல்லை 27ஆம் திகதிக்கு நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

இவ் விவகாரம் தொடர்பாக கான்ஸ் பிலிக்ஸ் கருத்து வெளியிடுகையில், மேலதிகமாக அறிவிக்கப்பட்டுள்ள 10 நாட்களுக்குள் சகல ஆயுதங்களையும் ஈராக் அழிக்கமுடியும் என தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கோரிக்கைக்கமைய ஈராக் தன்னிடமுள்ள "அல்சமுத்" ஏவுகணைகளை அழித்துவருவது தெரிந்ததே.

பாதுகாப்புச் சபையில் ஈராக் சம்பந்தமான இரண்டாவது பிரேரணையைக் கொண்டு வருவதற்குரிய சாத்தியங்கள் குறைவடைந்து வரும் நிலையில் இந்தப் பிரேரணைக்கு எவ்வாறு வாக்களிப்பது என்று தீர்மானிக்காத ஆறு நாடுகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் பிரிட்டிஷ் ராஜதந்திர தூது வரைச்சந்தித்துள்ளன.

ஈராக் மீதான இராணுவ நடவடிக்கை தவிர்க்கப்பட வேண்டுமானால் அந்த நாடு பூர்த்தி செய்ய வேண்டிய 06 நிபந்தனைகளை பிரிட்டன் முன்னர் அறிவித்திருந்தது. இவற்றை வரவேற்றுள்ள அந்த ஆறுநாடுகளின் பிரதி நிதிகளும் ஈராக்கை நிராயுத பாணியாக்குவதற்கு போடப்பட்டுள்ள கால எல்லை மிகவும் குறைவானது என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஈராக் விவ ரத்தில் சமாதானத்தீர்வு காண்பதுடன் யுத்தத்தைத் தவிர்த்துக்கொள்ள சர்வதேச சமூகம் மேலும் கால அவகாசத்தை வழங்க வேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

சமாதானத்திற்கு முறையான வாய்ப்பு ஒன்று வழங்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் நம்புவதாக பிரதமர் ஜமாலி வெளிநாட்டு நிருபர்களுடன் பேசிய போது கூறியுள்ளார்.

ஈராக் மீதான யுத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கும் ஐக்கிய நாடுகளின் தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பில் பாகிஸ்தான் கலந்துகொள்ளாது என ஆளும் கட்சி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## பதுங்கு குழிகளை அமைக்க கோரிக்கை

அமெரிக்காவின் விமானத்தாக் குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள பதுங்கு குழிகளை வெட்டுமாறு ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் ஈராக் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈராக்கிய கவர்னர் கள், மேயர்கள் மற்றும் அரசாங்க நிர்வாகிகள் ஆகியோருக் கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் ஈராக் மக்களுக்கு இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்.


கொல்லப்பட்ட செர்பிய பிரதமரின் உருவப் படத்திற்கு மொன்ரனிக்ரோ பிரதமர் அஞ்சலி செலுத்துகிறார்.




மோட்டாரை சரிபார்க்கும் குவைத்தில் உள்ள அமெரிக்கப்படைச் சிப்பாயும், விமானப்படை விமானங்களும்.

# செவ்வாய்க்கிரகத்தில் நீரோட்டம்



செவ்வாய்க்கிரகத்தின் மேற்குப் பகுதியிலுள்ள பள்ளத்தாக்கின் சுவர்களில் நீரோட்டம் அல்லது நீர்க்கசிவுகள் இருக்கின்றன.


கடந்த சில மாதங்களாகத் தொடர்ச்சியாகப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

சில புகைப்படங்களில் நீரோட்டத்தைக்காட்டும் கோடுகள் காணப்படுகின்றது. இவை மலைகளின் விளிம்பு வழியாக பள்ளத்தாக்கை நோக்கி நீரோட்டம் செல்கின்றது என்பதையே காட்டுகின்றன.

செவ்வாய்க்கிரகத்தில் நீரோட்டம் இருப்பது ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒரிஜோன் பல்கலைக்கழக பேராசிரியர் தகிரி மொராசிடியன் இதைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது ஆய்வின் முடிவுகளுக்கு செவ்வாய்க் கிரகத்தின் புகைப்படங்களையும் வெளியிட் டுள்ளார்.





மேலும், செவ்வாய்க் கிரகத்தில் தரைக்குக் கீழ் குளிர்ந்த நீர்ப்படலம் இருக்கின்றது. இவற்றிலிருந்து கசிந்தோடும் நீரினால் செவ்வாக்கிரகத்தினதும் செவ்வாய்க் கிரகத்திலுள்ள எரிமலைகளினதும் வெப்பம் குறைவடைந்துள்ளன என்றும் பேராசிரியர் தனது ஆய்வின் முடிவில் குறிப்பிட்டுள்ளதோடு நீரோட்டங்கள் இருப்பதால் உயிரினங்களும் அங்கு இருக்கலாம் என்று அவர் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

# "பொடோ" சட்ட செயலாக்கத்தை மீளாய்வு செய்ய குழு அமைப்பு

## இந்திய துணைப் பிரதமர் அறிவிப்பு



(புதுடில்லி)

பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அச்சட்டத்தின் செயலாக்கத்தை மீளாய்வு செய்வதற்கான குழு ஒன்றை பஞ்சாப், ஹரியானா உயர் நீதிமன்றத்தில் முன்னாள் தலைமை நீதிபதி தலைமையில் அமைத்துள்ளதாக இந்திய துணைப் பிரதமர் அத்வானி நேற்று முன்தினம் மக்களவையில் அறிவித்துள்ளார்.

இக்குழுவின் இதர உறுப்பினர்கள் பின்னர் அறிவிக்கப்படுவார்கள். இதன் அதிகார வரம்பு குறித்த சட்ட விதி முறைகள் விரைவில் அறிவிக்கப்படும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மட்டுமே இச்சட்டம் பயன்படுத்தப்படுவதை இக்குழு உறுதி செய்யும். மற்றைய குற்றவாளிகள் மீது இச்சட்டம் பயன்படுத்தப் படமாட்டாது என்றும் துணைப் பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

# குண்டுவெடிப்பு, புயல் அனர்த்தத்தினால் இந்தியாவில் 29பேர் பலி; 591பேர் காயம்

(புதுடில்லி)

இந்தியாவில் மும்பாய் நகரில் பயணிகள் ரயிலில் நேற்று முன்தினம் குண்டு வெடித்ததில் பத்துப் பேர் உயிரிழந்ததுடன் 75 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேநாள் ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பேருந்து ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் நான்கு பேர் கொல்லப்பட்டதுடன் 16பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை மேற்கு வங்காள மாநிலத்தில் ஏற்பட்ட புயல் காரணமாக கடந்த இருநாட்களில் 15பேர் உயிரிழந்துள்ளதுடன் 500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

புயல் காரணமாக வீடுகள் இடிந்து விழுந்தமையினாலும் மின்கம்பங்கள் சரிந்து விழுந்தமையாலும் இந்த மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




01) உலகிலேயே பெரிய வளைகுடா எது?
☐ மெக்ஸிக்கோ வளைகுடா.

02) உலகிலேயே மிகக் குறைவான எழுத்துக்கள் கொண்ட மொழி எது?
☐ ஹவாயன் மொழி (12 எழுத்துக்கள்)

03) 'நோபல் பரிசு' எவற்றிற்கு வழங்கப்படுகின்றன?
☐ இரசாயனவியல், மருத்துவம், உடலியல், இலக்கியம், பொருளாதாரம், அமைதி, பௌதீகவியல்.

04) இங்கிலாந்து பெருநிலப்பரப்பின் மேற்கில் அதிக தொலைவில் உள்ள முனை எது?
☐ லான்ஸ் என்ட்

05) உலகில் 'பொற்கோயில் நகரம்' என்று அழைக்கப்படுவது எது?
☐ அமிர்தசரஸ் (இந்தியா)

06) நியூத்திரனைக் கண்டு பிடித்தவர் யார்?
☐ சட்விக்

07) தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை எது?
☐ புறா.

08) உலகில் முதன் முதலில் பலூனில் பறந்தவர்கள் யார்?
☐ மாண்ட் சோல், ஃபியர் சகோதரர்கள்.

09) முதலாம் உலகப் போரில் வெற்றி வாகை சூடி, புகழ் பெற்ற அமெரிக்க விஞ்ஞானி யார்?
☐ காப்டன் எட்டி ரிக்கன் பேக்கர்.

10) மனித உடலில் குருதி பாயாத பகுதி எது?
☐ கண்ணிலுள்ள விழி வெண்படலம்.

11) பன்றிகளை செல்லப் பிராணியாக வளர்க்கும் நாடு எது?
☐ ஜப்பான்.

12) உலகிலேயே மிகவும் உயரமான இரட்டைக் கோபுரங்கள் எங்குள்ளது?
☐ மலேசியா.

13) மனிதனின் குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
☐ வில்லியம் ஹார்வே.

14) வைக்கோலில் அடங்கியுள்ள மூலகம் எது?
☐ பொட்டாசியம் (K)

15) நிலக்கரி, பெற்றோலியம் உருவாக எடுக்கும் காலம் எவ்வளவு?
☐ பல மில்லியன் வருடங்கள்.

16) உலகில் மிக நீளமான நைல் நதியின் நீளத்தை ஒத்த அளவில் கொண்ட நதி எது?
☐ அமேசன் நதி.

17) கூடு கட்டத் தெரியாத பறவை எது?
☐ குயில்

18) இலத்திரனியல் பொருட்கள் உற்பத்தியில் பிரபலமான ஜப்பானிய நிறுவனம் தற்போது (2003) புதிதாக அறிமுகப்படுத்திய கணினி எது?
☐ ஹெல்த் நெற் - (வீட்டுப் பாவனைக்கானது)

19) பலாப்பழத்தின் தாய்நாடு எது?
☐ இந்தியா.


20) 'வானத்தின் இளவரசி' என வர்ணிக்கப்படும் கிரகம் எது?
☐ வீனஸ்.

21) செந்நிறமான மழை பெய்யும் நாடு எது?
☐ இத்தாலி.

22) உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அரை இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ள டெஸ்ட் அந்தஸ்து பெறாத நாடு எது?
☐ கென்யா.

# கூகனிம் அருங்காட்சியகம்

## (Guggenheim Museum)



அருங்காட்சியங்களின் கட்டடங்கள் பெரும்பாலும் உன்னதமிக்க - ஒப்பற்ற கட்டடங்களாகவே அமைந்து விடுகின்றன. எடுத்துக்காட்டாக எத்தனையோ இடங்களைச் சுட்டிக்காட்டலாம். இங்கு ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வோம். கூகனிம் அருங்காட்சியகத்துக்கு உலகின் கவனத்தையெல்லாம் தன் பக்கம் ஈத்துக் கொள்ளக்கூடிய ஒரு தனிக் கவர்ச்சி உண்டு. அதன் தோற்றமே கலையுள்ளம் படைத்த எவரையும் கிறங்க வைக்கும். கட்டடக் கலைக்கே ஒரு புதிய பரிமாணத்தை வழங்குகின்ற விதத்தில் அதன் வடிவமைப்பு மலர்ந்துள்ளது. கட்டடக் கலையில் மாபெரும் கலைஞர் என்ற உலகளாவிய பெருமைக்குரியவரான பிராங்க் லாயிட் ரைட் என்பவர்தான் அந்தக் கட்டடத்தைக் கட்டிய கலை மேதை.

இன்று அமெரிக்காவில் குறிப்பாக நியூயோர்க் நகரில் கலை நயம்மிகுந்து காணப்படும் உயர்ந்த சிறந்த கட்டடங்களின் கர்த்தா அவர். கற்களை அடுக்கிவைத்து வானுயரக் கட்டடத்தை எழுப்புவது எல்லோராலும் முடியும். ஆனால், வித்தியாசமான தோற்றத்திலே வடிவமைத்து, ஏனைய கட்டடங்களினின்றும் வேறுபட்டிருப்பதில்த்தான் இதன் தனித்தன்மை இருக்கின்றது என்பதை இந்த மாமேதை மெய்ப்பித்துக் காட்டினார். அவர் 1956-1959ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்திலே வடிவமைத்துக் கட்டி முடித்த அற்புதக் கட்டடம் இந்தக் கூகனிம் அருங்காட்சியகம்.

அமெரிக்காவில் ராக் பெல்லரைப் போல் செல்வாக்கு மிக்க சாலமன் கூகனிம் என்பவர் மனமுவந்து இந்த அரிய கட்டடத்தை உருவாக்க உதவினார். அவரது அரிய முயற்சி முழுமையாய்ப் பலனளிக்க வேண்டுமாயின் அதற்குரிய தகுதி படைத்த ஒரு கட்டடக் கலைஞர் தேவை. முடிவாக அவர் தேர்ந்தெடுத்த கட்டடக் கலைஞர் பிராங்க் லாயிட் ரைட் ஆவார். காலம் உள்ளவரை அழியாத கலைக்கருவூலமாய் விளங்கும் ஓர் அருங்காட்சியகத்தை அமைத்துத் தாருங்கள் என்று அந்தக் கொடை வள்ளல், இந்தக் கலை வள்ளலைக் கேட்டுக் கொண்டார். பிராங்க் லாயிட் ரைடின் சிந்தனையிலிருந்த கலையெல்லாம் சேர்ந்த ஓர் அரிய கலைக்கூடமாக கூகனிம் அருக்காட்சியகம் மலர்ந்தது. வெறும் மூன்றடுக்குகளே கொண்டிருந்தாலும் எழிலும், வடிவமைப்பும் தன்னிகரற்றுத் தனித்து நிற்கும் தரம் வாய்ந்ததாய் அமைந்துள்ளது.

இக்கட்டடத்தின் தனிச்சிறப்பு இதற்கு ஈடுகொடுக்கத்தக்க வேறெந்த கலைக்கூடமும் இதுவரை அமையவில்லை என்பதுதான். மேலும், இதன் எழிலைக் கூட்டும் விதத்தில் இக்கட்டடத்தின் தொடர் கட்டடமாக இதற்குப் பக்கத்திலேயே பத்தடுக்குமாடிக் கட்டடம் ஒன்றும் இணைக்கப்பெற்றது. பிராங்க் லாயிட் ரைட் இப்போது உயிருடன் இல்லையென்றாலும் அவர் மறையுமுன்பே உருவகப்படுத்தியிருந்த வடிவமைப்பைப் பின்பற்றியே இந்தத் தொடர் கட்டடமும் அமைக்கப்பட்டது. உலகின் புராதன காலத்துச் சிற்பங்கள், ஓவியங்கள் இரு கட்டடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றைக் காண்பதற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வருகின்றனர். உள்ளூர் வாசிகளைவிட வெளிநாட்டிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் கூட்டமே மிகுதி.

இந்த கூகனிம் அருங்காட்சியகத்தினுள் காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படுவர். செவ்வாய்க் கிழமைகளில் காலை 11. 00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இது திறந்திருக்கும்.

# உலக மனிதவள அபிவிருத்தி அமைப்பின் கணிப்பீடு

☐ வாசனைத் திரவியத்திற்காக ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், செலவளிக்கப்படும் பணம் 12 பில்லியன் டொலர்கள். இப் பணத்தைக் கொண்டு உலகம் முழுவதும் உள்ள பெண்களுக்கு பிரசவ நல்வாழ்வு பராமரிப்பு செய்யப்போதுமாம்.

☐ அமெரிக்காவில் மட்டும் அழகு சாதனங்களுக்காக செலவு செய்யப்படும் தொகை, உலகில் உள்ள அனைவருக்கும் அடிப்படைக் கல்வி கொடுப்பதற்குப் போதுமாம். அல்லது உலகம் முழுதும் உள்ள அனைத்து மக்களுக்கும் தண்ணீர், மற்றும் துப்புரவு முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு கிட்டத்தட்டப் போதுமாம்.

☐ ஐரோப்பாவில் மட்டும் வாங்கப்படும் மதுபானங்களின் பெறுமதி 105 பில்லியன் டொலர்கள் ஆகும். இது உலகம் முழுவதுமான அடிப்படை சமூக சேவையை (மகப்பேறு நல் வாழ்வு, சத்துணவு, கல்வி, நீர் மற்றும் துப்புரவு போன்ற அடிப்படை நல்வாழ்வுகளை உள்ளடக்கியது) அளிப்பதற்கு ஆகும் செலவைக் காட்டிலும் இரண்டரை மடங்கு அதிகமானது. (இதற்கு 40 பில்லியன் டொலர்கள் மட்டும் போதும்)

☐ உலக இராணுவச் செலவுகள் 780 பில்லியன் டொலர்கள், இத் தொகை அனைவருக்கும் நல் வாழ்வு, சத்துணவு, கல்வி, நீர், மற்றும் துப்புரவு சேவைக்காக ஆகும் செலவைக் காட்டிலும் 20 மடங்கு அதிகம்.

☐ உலகின் 03 பெரும் பணக்காரர்கள் உலகின் கடைசி 48 நாடுகளின் மொத்த உற்பத்தியைக் காட்டிலும் அதிகமான சொத்தை வைத்துள்ளார்கள்.

☐ உலகின் முதல் 32 பணக்காரர்கள் ஆசியாவின் மொத்த உற்பத்தியைக் காட்டிலும் அதிகம் சொத்து வைத்திருக்கின்றார்கள்.

☐ உலகின் முதல் 225 பணக்காரர்கள் அவர்களின் செல்வத்தில் 4 வீதத்தைத் தானமாகக் கொடுத்தால் உலகில் அனைவருக்கும் தேவையான அடிப்படை சமூக சேவைகளைச் செய்துவிடலாம்.

# பார்வையற்றவருக்கு உதவும் செயற்கைக்கோள் கருவி

கண் பார்வையற்றவர்களுக்கு வழிகாட்ட செயற்கைக்கோள் உதவியுடன் செயற்படும் விக்டர் டிரேக்கர் என்ற கருவி கண்டு பிடிக்கப்பட்டிருகின்றது.

கண் பார்வையற்றவர்கள் கைத்தடி உதவியுடன் வீதியில் நடந்து செல்வதைப் பார்த்திருப்பீர்கள். வீதியில் பள்ளம் பொருட்கள் இருந்தால் கைத்தடி மூலம் தெரிந்து கொண்டு ஒதுங்கி நடப்பார்கள். இந்த விஞ்ஞான யுகத்தில் அவர்களுக்கு வழிகாட்ட செயற்கைக்கோள் உதவியுடன் செயற்படும் புதிய கருவி கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தக் கருவியைப் பார்வையற்றவர் உடம்பில் பொருத்திக் கொள்ள வேண்டும். அவர் வீதியால் நடந்து செல்லும் போது அவருக்கு முன் பள்ளம், கட்டடம் போன்றவை இருந்தால் அந்தக் கருவி ஒலி எழுப்பும். 'விக்டர் டிரேக்கர்' என்ற அந்தக் கருவியின் விலை 160 டொலர்களாகும்.

# தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர்



# பேருந்துப் பணி



தொட்டியடி, விசுவமடு, கண்டாவளை, கிளிநொச்சி வழித்தடத்தில் 18-03-2003 ஆம் நாளில் இருந்து மேற்படி பணி அரச அலுவலர், பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**தொட்டியடி - கண்டாவளை - கிளிநொச்சி.**

| தொட்டியடி | விசுவமடு | தருமபுரம் | வெளிக்கண்டல் | கண்டாவளை | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.10 | 07.25 | 07.40 | 08.10 | 08.55 | 09.10 |

**கிளிநொச்சி - கண்டாவளை - தொட்டியடி.**

| கிளிநொச்சி | பரந்தன் | கண்டாவளை | வெளிக்கண்டல் | தருமபுரம் | விசுவமடு | தொட்டியடி |
|---|---|---|---|---|---|---|
| மாலை 04.30 | 04.45 | 05.30 | 06.00 | 06.15 | 06.30 | 06.40 |

முகாமையாளர்,

பேருந்துப் பகுதி, கிளிநொச்சி.

---

## புதுக்குடியிருப்பு - நெடுங்கேணி - புளியங்குளம் பேருந்துப்பணியில் இரண்டு நேரப் பணிகளில் வழித்தட மாற்றம்.

18-03-2003 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்ட பணிகள் பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**புதுக்குடியிருப்பு - மாங்குளம் - புளியங்குளம்.**

| புதுக்குடியிருப்பு | கற்சிலைமடு | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|
| காலை 05.00 | 05.45 | 07.30 | 08.15 |
| காலை 07.00 | 07.45 | 09.30 | 10.15 |

**புளியங்குளம் - மாங்குளம் - புதுக்குடியிருப்பு.**

| புளியங்குளம் | மாங்குளம் | கற்சிலைமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|
| பகல் 11.30 | 12.00 | 02.00 | 02.45 |
| பகல் 01.30 | 02.00 | 04.00 | 04.45 |

முகாமையாளர்,

பயணியர் போக்குவரவு ஊர்தி வழியனுப்பணியகம், புதுக்குடியிருப்பு.

---

பளை, மருதங்கேணி, கிளிநொச்சி வழித்தடத்தில் 16-03-2003 ஆம் நாளிலிருந்து வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மேற்படி பேருந்துப் பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**பளை - மருதங்கேணி - கிளிநொச்சி.**

| பளை | புதுக்காட்டுச் சந்தி | மருதங்கேணி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| காலை 09.00 | 09.10 | 09.45 | 11.30 |

**கிளிநொச்சி - மருதங்கேணி - பளை.**

| கிளிநொச்சி | புதுக்காட்டுச் சந்தி | மருதங்கேணி | பளை |
|---|---|---|---|
| மாலை 03.00 | 04.00 | 04.35 | 05.25 |

முகாமையாளர்,

பேருந்துப் பகுதி, கிளிநொச்சி.

# முழங்காவில் - முகமாலைப் பேருந்துப் பணி, வெள்ளாங்குளம் - முழங்காவில் - முகமாலைப் பணியாக மாற்றம்.

மேற்படி பணி 18.03.2003 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் வெள்ளாங்குளத்தில் தொடங்கி முழங்காவில் - முகமாலை வழித்தடத்தில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**வெள்ளாங்குளம் - முழங்காவில் - முகமாலை.**

| வெள்ளாங்குளம் | முழங்காவில் | செயபுரம் | வன்னேரி | அ.பெ.சந்தி | கந்தபுரம் | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுச்சந்தி | முகமாலை (பளை) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 05.15 | 05.30 | 06.00 | 06.30 | 07.00 | - | 08.00 | 08.35 | 09.10 | 09.20 | 09.35 |
| காலை 06.15 | 06.30 | 07.00 | 07.30 | 08.00 | - | 09.00 | 09.35 | 10.10 | 10.20 | 10.35 |
| காலை 08.15 | 08.30 | 09.00 | 09.30 | 10.00 | 10.15 | 11.00 | 11.35 | 12.10 | 12.20 | 12.35 |
| காலை 09.45 | 10.00 | 10.30 | 11.00 | 11.30 | 11.45 | 12.30 | 01.05 | 01.40 | 01.50 | 02.05 |

**முகமாலை - முழங்காவில் - வெள்ளாங்குளம்.**

| முகமாலை (பளை) | புதுக்காட்டுச்சந்தி | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அ.பெ.சந்தி | வன்னேரி | செயபுரம் | முழங்காவில் | வெள்ளாங்குளம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 10.30 | 10.45 | 10.55 | 11.30 | 11.45 | - | 01.05 | 01.35 | 02.05 | 02.35 | 02.50 |
| பகல் 12.30 | 12.45 | 12.55 | 01.30 | 01.45 | - | 03.05 | 03.35 | 04.05 | 04.35 | 04.50 |
| பகல் 02.30 | 02.45 | 02.55 | 03.30 | 03.45 | 04.50 | 05.05 | 05.35 | 06.05 | 06.35 | 06.50 |
| மாலை 05.00 | 05.15 | 05.25 | 06.00 | 06.15 | 07.20 | 07.35 | 08.05 | 08.35 | 09.05 | 09.20 |

குறிப்பு: கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் 15 மணித்துளிகள் நிற்கும்.

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.

# மல்லாவி - மாங்குளம் - முகமாலை வழித்தடத்தில் திங்கள், வெள்ளி தோறும் அரச அலுவலர் பணியாக நடைபெற்ற பேருந்துப்பணியில் நேர மாற்றம்.

17.03.2003 ஆம் நாளிலிருந்து மேற்படி பணி பின்வரும் நேர ஒழுங்கில் அரச அலுவலர் வேண்டுகைக்கு அமைவாக மாற்றப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கு**

**மல்லாவி - மாங்குளம் - முகமாலை.**

| மல்லாவி | மாங்குளம் | முறுகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுச்சந்தி | முகமாலை (பளை) |
|---|---|---|---|---|---|---|---|
| பகல் 01.30 | 02.30 | 03.10 | 03.40 | 03.55 | 04.30 | 04.40 | 04.55 |

**முகமாலை - மாங்குளம் - மல்லாவி.**

| முகமாலை (பளை). | புதுக்காட்டுச்சந்தி | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறுகண்டி | மாங்குளம் | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|
| காலை 07.30 | 07.45 | 07.55 | 08.30 | 08.45 | 09.15 | 09.55 | 10.55 |

முறுகண்டியில் 20 மணித்துளிகள் நிற்கும்.

(சி-8018)

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி, கிளிநொச்சி.

# நதிகளும் நகரங்களும்

| நதி | நகரம் | நாடு |
|---|---|---|
| நைல் | அலெக்ஸாந்திரியா | எகிப்து |
| அம்செல் | ஆம்ஸ்டர்டாம் | நெதர்லாந்து |
| செசெல்ட் | அண்ட்வெர்ப் | பெல்ஜியம் |
| சீசில் | அங்காரா | துருக்கி |
| டிக்ரிஸ் | பாக்தாத் | ஈராக் |
| மேனம் | பாங்கொக் | தாய்லாந்து |
| தனூபி | பெல்கிரேட் | யூகோஸ்லாபியா |
| ஸ்பீரி | பேர்ளின் | ஜெர்மனி |
| ரியின் | பேர்ளின் | ஜெர்மனி |
| அவோன் | பிரிஸ்டோல் | இங்கிலாந்து |
| தனூபி | புடாபெஸ்ட் | ஹங்கேரி |
| நைல் | கெய்ரோ | எகிப்து |
| கான்டோன் | கான்டோன் | சீனா |
| காம்ப்ஹீலி | சிட்டகாங்க் | பங்களாதேசம் |
| யாங்-சீ-சியாங் | சுங்கிங் | சீனா |
| ரியின் | கோலோக்னீ | ஜெர்மனி |
| கிளைடீ | கிளாஸ்கோ | ஸ்கொட்லாந்து |
| ஹூம்பர் | ஹீல் | இங்கிலாந்து |

| நதி | நகரம் | நாடு |
|---|---|---|
| எல்பீ | ஹம்பர்க் | ஜெர்மனி |
| இந்தஸ் | கராச்சி | பாகிஸ்தான் |
| ப்ளூ.வெயிட் நைல் | கார்டோம் | சூடான் |
| ரவி | லாகோர் | பாகிஸ்தான் |
| டாகூஸ் | லிஸ்பென் | போர்த்துக்கல் |
| மெர்சி | லிவர்பூல் | இங்கிலாந்து |
| தாமஸ் | லண்டன் | இங்கிலாந்து |
| ஒட்டாவா | மான்டிரால் | கனடா |
| மோஸ்க்வா | மொஸ்கோ | ரஷ்யா |
| யாங்-சீ-சியாங் | நான்கிங் | சீனா |
| மிஸிசிப்பி | நியூஓரியன்ஸ் | அமெரிக்கா |
| ஹட்சன் | நியூயோர்க் | அமெரிக்கா |
| சீனி | பாரிஸ் | பிரான்ஸ் |
| தேலாவெயர் | பிலடல்பியா | அமெரிக்கா |
| சென்-லோரன்ஸ் | கியூபெக் | கனடா |
| ஐராவதி | ரங்கூன் | பர்மா |
| தீபெர் | ரோம் | இத்தாலி |
| யாங்-சீ-சியாங் | ஷான்கல் | சீனா |
| சுமிதா | டோக்கியோ | ஜப்பான் |
| தனூபி | வியென்னா | ஆஸ்திரியா |
| விஸ்துலா | வார்சா | போலந்து |
| போட்டாமாக் | வாஷிங்டன் | அமெரிக்கா |

# அவுஸ்திரேலியாக் கண்டம்

ஒரு கண்டமாகவும் அதேவேளையில் தனி நாடாகவும் விளங்குகின்றது. பரப்பளவைப் பொறுத்தவரை கண்டம் என்ற அடிப்படையில் உலகில் ஐந்தாவது சிறிய கண்டம். இந்தியப் பெருங்கடலுக்கும், தென்பசுபிக் கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது. துவக்க காலத்தில் பிரிட்டனின் காலணி நாடாக இருந்தது.

*மக்கள் தொகை :- 1,76,84,000 (1994)*

*மக்கள் நெருக்கம்:- சதுரகி. மீற்றருக்கு 2பேர்.*

*மொத்தப்பரப்பு :- 77,13,000 ச.கி.மீ (டாஸ்மானியாவின் 67,800 ச.கி.மீ. உட்பட)*

*கிழக்கு - மேற்கு தூரம்:- 3,983 கி.மீ.*

*வடக்கு - கிழக்கு தூரம்:- 3,138 கி.மீ.*

*கடற்கரை :- 27948 கி.மீ.*

நாடுகள் :- அவுஸ்திரேலியா, கிரிபாஸ், தூவலூ, டோங்கோ, நௌரு, நியூசிலாந்து, வனாட்டு, சமோவா, பாப்புவா, நியூக்கினியா, பிஜி, சாலமன் தீவுகள். (பசுபிக் பெருங்கடலின் பல தீவுகளையும், அவுஸ்திரேலியாவையும் சேர்த்து ஓஷ்யானியா என்று அழைக்கப் படுவதுமுண்டு.

## எப்படி வந்தது

தற்போதைய நாகரிக உலகில் இரண்டு பேர் சந்திக்கும் போது வலது கையை நீட்டி Hello how are you? என்று புன்முறுவலுடன் கைகுலுக்கிக்கொள்வது சிறப்பு அம்சம். இந்தப் பழக்கம் எப்படி வந்தது?

ஆரம்ப காலங்களில் போர் வீரர்கள் வலது கையில் வாள் அல்லது துப்பாக்கி வைத்திருப் பார்களாம். இதனால் இவ்வீரர்களுடன் நட்புடன் பழகுவதற்கு மக்கள் அஞ்சுவார்களாம்.

இந்த அச்சத்தைப் போக்கவே அறிமுகமானதுதான் "கையில் வாள் இல்லை, தாக்குவேன் என்ற பயம் வேண்டாம். நட்புறவுடன் நாம் இருப்போம்" என்பதற்கு அறிகுறியாகச் சந்திக்கும் இருவர் வலது கரத்தை நீட்டிப் பற்றிக் குலுக்கும் பழக்கம்.

# இதயப் படபடப்பைக் குறைக்க புதிய மருந்து

இதயம் தன் பணியை நிறுத்தி விட்டால் நம் வாழ்கையே முடிந்து விடும். அந்தளவிற்கு இதயம் நமது வாழ்வில் முக்கிய பங்காற்றுகின்றது.

இதயத்தில் சிலருக்கு அதிக படபடப்பு, அதிக அளவிலான நாடித்துடிப்பு, ரத்த அழுத்தம் போன்ற பல்வேறு தொந்தரவுகள் இருக்கும்.

இதனைக் குணப்படுத்த "அட்டினாலஸ்" எனும் புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்தைப் பயன்படுத்தியவுடன் இதயம் சுருங்கும் போதும், விரியும் போதும் ஏற்படும் இரத்த அழுத்தத்தின் சீர்கெட்ட தன்மை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகின்றது.

அதேபோல் இதயத்தில் ஏற்படும் 'ஆஞ்சைனா'தாக்குதலில் இருந்து அதன் தீவிர தன்மையும் குறைகின்றது. இதயத்திலிருந்து அதிக இரத்தம் வெளியேறாமல் கட்டுப்படுத்தப்படுகின்றது. மேலும் இதயத் துடிப்பு அதிகரிக்காமல் பார்த்துக்கொள்கின்றது.

அத்துடன் அட்டினாலஸ் மருந்து இதயத்தின் வேலைப் பழுவைக் குறைத்துவிடுவதால் இதயத்திற்குத் தேவையான ஒக்ஸிஸன் அளவும் குறைகின்றது.

இந்த மருந்தைப் பயன்படுத்துவதால் சிலருக்கு மனச்சோர்வு, மலச்சிக்கல் போன்ற தொந்தரவுகள் ஏற்படலாம். எனவே வைத்தியரின் ஆலோசனையின் பெயரிலேயே வாங்கிப் பயன் படுத்த வேண்டும்.

# புற்றுநோயைக் குணப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

இங்கிலாந்தில் புற்றுநோயைக் குணப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புற்றுநோய் என்பது ஆட்கொல்லி நோயாகும் உலகம் முழுவதும் ஏராளமானவர்கள் அந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். உடலிலுள்ள புற்று நோய்த்திசுக்களை அழிக்க ரேடியோதெரப்பி (கதிர் வீச்சு சிகிச்சை) அளிக்கின்றனர். கான்சர் அழிப்பு மருந்து கொடுக்கப்படு கிறது. ஆனால் சில நேரம் அந் தச் சிகிச்சை மருந்துக்குப் புற்று நோய் கட்டுப்படுவதில்லை. மருந்தை எதிர்த்து விடும். அதற்கு புதிய மருந்தை வடக்கு இங்கிலாந்திலுள்ள நியூகாஸ்ல் பல் கலைக் கழக பேராசிரியர் டாக்டர் ஹிலரி கல்வர்ட் கண்டுபிடித் திருக் கிறார். அந்தப்புதிய மருந்துக்கு டி.பி.ஐ. 699 எனப் பெயரிடப்பட் டுள்ளது. அந்த மருந்து கொடுத்த பின்னர் மற்றைய மருந்துகளை கொடுத்தால் அதைப் புற்றுநோய் பாதிப்புக் குள்ளான திசுக்கள் ஏற்றுக் கொள்ளும் என டாக்டர் கூறியுள்ளார்.

## தெரிந்துகொள்ள

♥கவிதை எழுதத் தொடங்கும் முன் சுத்தமான வெள்ளை உடையை உடுத்துக் கொண்டே கவிதை எழுதுவாராம் ஷெல்லி

♥கதவுகளையெல்லாம் அடைத்துக்கொண்டு இருட்டறையில்த்தான் எழுதுவாராம் பிரெஞ்சு எழுத்தாளர் "எமிலிஜோலா"

♥தன் கவிதைகளை மஞ்சள் நிறக் காகிதங்களிலும், கட்டுரைகளை ரோஸ் வண்ணக் காகிதங்களிலும், கதைகளை நீல வண்ணக் காகிதங்களிலும் எழுதும் பழக்கமுடையவர் "அலெக்ஸாண்டர் டுமாஸ்" இவர் எழுதுவதற்கு பச்சைமையைப் பயன்படுத்துவதுடன் ஒவ்வொரு முறை எழுதத் தொடங்கும் போதும் புதுப் பேனாவை உபயோகிப்பாராம்.

♥தன் நாவல்களை சிறப்பாக முடிக்க முதன் முதலாக டைப்ரைட்டரை உபயோகித்தவர் "லியோடால்ஸ்டாய்"

# விவாகமானவர்களுக்கே நீண்ட ஆயுள்

விவாகமாகாத தனி நபர்களை - பிரமச்சாரிகளை விடவும் விவாகமானவர்களே அதிகம் தேகாரோக்கியத்துடன் நலமாகவும் வாழ்கின்றார்கள் என்கின்ற விஞ்ஞான உண்மைக்கு அடுத்ததாக, விவாகமாகாதவர்களை விடவும், விவாகமானவர்களே நீண்ட ஆயுளுடன் வாழ்வதாக சில ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

ஆய்வுகளின் அடிப்படையில் தனி நபர்களை விடவும் விவாக மானவர்களே நீண்ட ஆயுளுடன் வாழ்கின்றார்கள் என்கின்ற தகவலை அமெரிக்கா வில் முன் வைத்தவர் ஏஞ்சலா டொன்கின் எனும் நபர்.

இவர் அமெரிக்க அரசு வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிக்கைகளின் பிரகாரமே மேற்படி கருத்தை முன் வைத்திருப்பதாகக் கூறும் செய்திகள், இந்தக் கருத்தை வலியுறுத்துவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான சான்றுகளையும் முன் வைத்திருக் கின்றார்.

45 வயதுக்கு மேற்பட்ட (விவாகமாகாத) தனி நபர்களில் நூற்றுக்கு 23 பேர் குறைந்த வயதில் மரணிப்பதாகக் கூறும் தகவல், விவாகரத்துச் செய்தோர் நிலமை இதைவிடப் பரிதாபம் என்கின்றது. விவாகரத்துச் செய்வோரில் நூற்றுக்கு 30 பேர் அதி இளம் வயதில் மரணத்தைத் தழுவுகின்றார்களாம்.

இந்நிலைக்கு விவாகமானோர் குறைந்த அளவிலேயே சிகரட் புகைப்பது, தேகப்பயிற்சி மேற்கொள்வது சரியான நேரத்துக்கு ஏதாவது உண்பது தமது தேக ஆரோக்கியம் குறித்து மிகுந்த கவனம் எடுப்பதே காரணங்கள் எனக் கூறியிருக்கும் ஏஞ்சலா டொன்கின் தனி நபர்கள் விவாகமானவர் களைப் போல் பொறுப்புக்களை அதிகம் உணராதவர்களாக நடந்து கொள்வதில் சரியாகச் சாப்பிடுவது, தேகப் பயிற்சி செய்வது என்று எதிலுமே அக்கறை காட்டிக் கொள்வதில்லை.

இக்கருத்தை ஒத்த கருத்து ஒன்றை இரு வருடங்களுக்கு முன்பு அவுஸ்திரேலிய ஆய்வுக் குழுவினரும் வெளியிட்டுள்ளனர்.

விவாகமானவர்கள் நேராக திருப்திகரமாக - தெளிவாக சிந்தனை செய்வதும் - புத்தி சாதுரியமாக செயற்படுவதுமே அவர்களை நீண்டகாலம் வாழ வைக்கிறது என்பதே அவுஸ்திரேலியக் குழுவினர் வெளியிட்ட கருத்தாகும்.

அவுஸ்திரேலிய சேன்ட் வின்ஸ்டன்ட் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட இற்றைக்கு 08 வருடங்களுக்கு முன்பான ஆய்விலிருந்தே (60 வயதுக்கு மேற்பட்ட 2805 நோயாளர்களை உட்படுத்தி) தலைமை வைத்தியர் லியொன்சிமொன்ஸ் மேற்படி சிந்தனை ரீதியான கருத்தை முன் வைத்திருந்தார்.

தனி நபர்களை விட விவாக மானவர்கள் இதய நோய்களால் பாதிக்கப்படுவதும் குறைவு எனக் கூறியிருந்த வைத்தியர் லியொன் சிமொன்ஸ், அதற்கான சரியான காரணம் என்னவென்பது பற்றி ஆய்வுகளில் இருந்து தெரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறியிருந்தார்.

தனி நபர்களை விவாகமானவர்கள் என சகல மட்டத்தினரதும் நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ள அமெரிக்காவின் "பெமிலி போகஸ்" (Family focus) அமைப்பு மேற்படி ஆய்வுகளில் தனி விருப்பம் காட்டி வருகின்ற நிலைமையில் இவ்வமைப்பின் ஆலோசகரான வைத்தியர் "ஏட்ரியன் ரோஜர்ஸ்" சகலருக்குமாக விடுக்கும் வேண்டு கோள் இதுதான்.

"சந்தோஷமாக இருக்கக்கூடிய திருமண வாழ்வு உண்மையிலேயே சிறந்ததுதான்" என்பதாகும்.

# முக்கிய அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) பளை கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான கிளைப்பொதுச்சபைக்

# கூட்ட அறிவித்தல் - 2003

மேற்படி சங்கத்தின் கிளைகளுக்கான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் கீழ்க் குறிப்பிட்ட விபரப்படி நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**திகதி : 22-03-2003 சனிக்கிழமை**

**நேரம் : முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | 01 | பளை | தலைமைச் செயலகம், பளை |
| 02. | 02 | மாசார் | மாசார் கிளை நிலையம் |
| 03. | 03 | முள்ளிப்பற்று | கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை, இயக்கச்சி |
| 04. | 04 | சோரன்பற்று | கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம், சோரன்பற்று |
| 05. | 05 | புலோப்பளை | கிளி/புலோப்பளை றோ.க.த.க. பாடசாலை, புலோப்பளை |
| 06. | 06 | இத்தாவில் | கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை, பளை |
| 07. | 10 | புலோப்பளை கிழக்கு | கிளி/புலோப்பளை றோ.க.த.க. பாடசாலை, புலோப்பளை |
| 08. | 11 | அல்லிப்பளை | கிளி/புலோப்பளை றோ.க.த.க. பாடசாலை, புலோப்பளை |
| 09. | 12 | கச்சார்வெளி | தலைமைச் செயலகம், பளை |
| 10. | 13 | தம்பகாமம் | தலைமைச் செயலகம், பளை |
| 11. | 14 | சங்கத்தார்வயல் | கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை, இயக்கச்சி |

**திகதி : 23-03-2003 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | 07 | முகமாலை | கோண்டாவில் கிளை நிலையம் |
| 02. | 09 | கிளாலி | மிருசுவில், உபதபால் அலுவலக கட்டடத்திற்கு அருகாமையிலுள்ள கட்டடம் |

குறிப்பு: (1) இக்கிளைக் குழுக்கள் தெரிவு சம்பந்தமான மேலதிக விபரங்களைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும், சம்பந்தப்பட்ட கிளை நிலையங்களிலும் பார்வையிடலாம்.

(2) சங்கத்தின் வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்கள் பூரணமாக மீளக் குடியமராத காரணத்தால் தனித்தனி அறிவித்தல் வழங்கப்படவில்லை. எனினும் சம்பந்தப்பட்ட கிளைகளிலும், தலைமை அலுவலகத்திலும் பொது அறிவித்தல் மூலமாக இது சம்பந்தமான விபரங்களைப் பார்வையிடலாம்.

பொ. வதனி,
ஒப்பம்) செயலாளர்,
பச்சிலைப்பள்ளி, ப.நோ.கூ. சங்கம்,
பளை.
12-03-2003

தலைவர்,
சி. சுந்தரலிங்கம்

(சி-8013)



**சிந்தனைக்கு**

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக் காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும், போராட்டத்தில் குதித்தோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 15-03-2003


## சமாதானத்தின் ஆயுள்?

கப்பல் மூழ்கடிப்பு விடயத்தில் சிறிலங்காப் படையினர் தான் தோன்றித் தனமாக நடந்து கொண்டதினால் கண்காணிப்புக் குழுவையும், கண்காணிப்புச் செயற்பாட்டையும் செயலிழக்கச் செய்துவிட்டனர் என்ற விடுதலைப் புலிகளின் குற்றச் சாட்டானது முற்றிலும் பொருத்தப்பாடானதே. இவ்வாறு படையினர் நடக்க முற்பட்டார்கள் எனின் கண்காணிப்புக் குழு, புரிந்துணர்வு உடன்பாடு என்பதில் அர்த்தம் எதுவுமில்லை என்ற கூற்றுக்களும் நியாயபூர்வமானதே.

புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு விவகாரத்தில் சிறிலங்காக் கடற் படையினர் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு- யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு உட்பட்டும் நடக்கவில்லை. கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டிற்கு இடமளிக்கவும் இல்லை. இந்நிலையில் விடுதலைப் புலிகள் கூறுவது போன்று யுத்தநிறுத்தக்குழு செயலிழந்துள்ளது என்பது சரியானதொன்றே.

விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்றை சிறிலங்கா கடற்படை சர்வதேச கடற்பரப்பில் வழிமறித்தமை சரியானதா? என்ற வாதம் ஒரு புறம் இருக்க, வழிமறிக்கப்பட்ட கப்பல் மீது சிறிலங்கா கடற்படை எவ்வாறு தாக்குதலை நடத்த முடியும்? சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் இருக்கையில் யுத்த நிறுத்த மீறல் ஒன்று இடம்பெறின் அதைத் தீர்ப்பதற்கான வழிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு தாக்குவதென்பது யுத்த நிறுத்த மீறலாக மாட்டாதா?

சரி, சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு கூறுவது போல், விடுதலைப் புலிகளின் கப்பல் ஆயுதங்களுடன் வந்துள்ளதாகவே வைத்துக் கொள்வோம். அவ்வாறானால், சிறிலங்காக் கடற்படை செய்திருக்க வேண்டியது என்ன? யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கென நியமிக்கப்பட்ட குழுவை அல்லவா அழைத்திருத்தல் வேண்டும்? அக்கப்பலைச் சோதனையிட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாது கப்பலைத் தாக்கி அழித்துவிட்டு ஆயுதங்களுடன் வந்தார்கள், தாக்கினோம் எனக் கூறின், யுத்தநிறுத்த உடன்பாடுதான் ஏன்? கண்காணிப்புக் குழுதான் ஏன்? ஏதோ ஒரு காரணத்தைக்கூறி தாக்குதல் நடத்துவதென்றால் அது யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறானதாகாதா? போர் நிறுத்த ஒப்பந்த மீறலாகமாட்டாதா?

தற்பொழுது தமது கடற்படை நடத்திய தாக்குதலை சிறிலங்கா சனாதிபதியின் தரப்பு மட்டுமல்ல, ரணிலின் அரசாங்கத்தரப்பும் நியாயப்படுத்த முற்பட்டு நிற்கின்றது. சிறிலங்காவின் இறையாண்மையையும் ஐக்கியத்தையும் பேணும் வகையில் இத்தாக்குதல் சரியானது என அரசாங்கத் தரப்புக் கூற விழைவது போல் தெரிகின்றது.

இதனால், தற்பொழுது எழும் கேள்வியானது யுத்த நிறுத்த உடன்பாடு என்பது எத்தகைய விடயங்களுக்கு உட்பட்டது, எத்தகைய விடயங்களுக்கு உட்படாதது என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதே. அவ்வாறு இல்லாது சிறிலங்கா அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதலை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்கம் மட்டுமே கொண்டதாக இருப்பின் அரசாங்கத்தின் விளக்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானவையாகும்.

கப்பலில் கொடிகள் ஏதும் பறக்கவில்லை. ஆகையினால் தாக்கப் பட்டது எனக் கூறும் விளக்கம் ஒரு நொண்டிச்சாட்டாகும். ஏனெனில் சிறிலங்கா கடற்படையினால் சர்வதேசக் கடற்பரப்பில் செல்லும் கொடிகள் அற்ற கப்பல்கள் யாவற்றையும் தாக்கமுடியுமா? சிறிலங்கா கடற்படை, இக்கப்பல் புலிகளின் கப்பல் எனத் தெரிந்து கொண்டே பின்னர் - யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகள் எதனையும் கருத்திற்கொள்ளாது இத்தாக்குதலை நடத்தியது என்பதே உண்மை.

இந்நிலையானது சிறிலங்கா ஆயுதப்படையினர் சமாதான முயற்சிகளுக்கு மாறுபாடான மனோநிலையைக் கொண்டிருப் பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. அரசாங்கமும் இத்தகைய நடவடிக்கைகளை ஆதரிக்க முற்படுவதானது, ஆயுதப்படைத் தரப்பினரின் நிலைப்பாட்டை வலுவடையச் செய்வதாகவே அமையக் கூடும். இவை யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானவையாகும். ஆகையினால், விடுதலைப்புலிகள் வலியுறுத்திவருவது போன்று யுத்த நிறுத்த மீறல்களைக் கையாளும் பொறுப்பினை சர்வதேசக் கண்காணிப்புக் குழுவினர் பெறுப்பேற்காத வரை சமாதானத்தின் ஆயுட் காலம் குறித்து கேள்விகள் எழுவது தவிர்க்க இயலாததாகிவிடும்.

# சிறிலங்கா அரசு - புலிகள் சமாதானப்பணி

# கடுமையான பாதையில் செல்கிறது!

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் கெல்ஹேசன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்குமிடையில் சமாதானத் தீர்வை ஏற்படுத்தும் எமது பணி கடுமையான பாதையில் செல்கின்றது என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகவியலாளர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது இந்தப் பயணம் இரு பகுதியினருக்கும் பயனளிக்கும் பயணமாக அமையும். சமாதானத்தின் நன்மை தீமைகள் பற்றி புலிகளுடன் பேசியுள்ளோம். எமக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் எமது சமாதானப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணியில் பல கஷ்ரங்கள் இருக்கின்றன. நாம் இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடனும், அவதானத்துடனும் இருக்கிறோம். எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் இரு பகுதியினருக்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம் என கூறிய கெல்ஹேசன் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை பற்றிக் கூறுகையில், படிப்படியாக ஒவ்வொன்றாகத் தான் இதைச் சரிசெய்ய முடியும் என்றார்.

வன்னி மக்கள் பற்றி அவர் கூறுகையில்: வன்னியிலுள்ள மக்கள் மிகவும் நல்லவர்களாகவும் பண்புள்ளவர்களாகவும் இருக்கின்றனர் என்றார்.

### கப்பல் மூழ்கடிப்பு விவகாரம்

## கண்காணிப்புக் குழு அறிக்கை வெளிவர இரு வாரமாகும்!

### கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கப்பலை சிறிலங்கா கடற்படை தாக்கியழித்த சம்பவம் குறித்து இறுதி மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பிக்க இரு வாரங்கள் செல்லும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழுவின் இரு அணியினர் மதிப்பீடுகளை மேற்கொண்டு வருவதாகக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஒக்லண்ட் கூறியுள்ளார்.

இரு குழுவினரும் ஏற்கனவே கடற்படை உயர் அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதுடன் அடுத்து வரும் நாட்களிலும் அவர்கள் இந்தப் பேச்சுக்களை தொடரவுள்ளதாக கண்காணிப்புக் குழுப் பிரதித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உயர்தரப் பரீட்சை தொடர்பாக கொழும்பில் கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான கூட்டமொன்று எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்கள் அனுப்பப்படுவது தொடர்பாகவும், விடைத்தாள்கள் திருப்பி அனுப்பப்படுவது தொடர்பாகவும் பரீட்சை இணைப்பாளர்கள், பிரதம மேற்பார்வையாளர்களை நியமிப்பது தொடர்பாகவும் மேலும் பல விடயங்களை உள்ளடக்கியதுமான இக்கூட்டம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஒவ்வொரு மாவட்டங்களினதும் பிரதான வலயக்கல்விப் பணிப்பாளர்களை சமுகமளிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார். (10)

## விசேட கலந்துரையாடல்

முல்லை மாவட்டத்திற்குட்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான விசேட கலந்துரையாடல் வரும் 16ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

## நோபல் பரிசு பெற்ற "ஜோன் கியூம்" இலங்கைக்கு விஜயம்

### விடுதலைப்புலிகளையும் சந்திப்பார்

(கொழும்பு)

சமாதானத்திற்கான நோபல் பரிசை வென்ற அயர்லாந்து நாட்டவரான 'ஜோன் கியூம்' இம்மாத இறுதியில் இலங்கை வருகிறார்.

இவ் விஜயத்தின் போது அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நாட்டில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளை வலுப்படுத்துவதே அவரின் விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வட-அயர்லாந்து சமாதான முயற்சிகளுக்காக சமாதானத்திற்கான நோபல் பரிசை வென்றவரான ஜோன் கியூம் வட-அயர்லாந்து சமூக சனநாயகத் தொழிற்கட்சியின் ஸ்தாபகராவார்.

## சகல சிகிச்சைகளும் நடைபெறும்

(மல்லாவி)

மல்லாவி அரசினர் வைத்தியசாலையுடன் இணைந்து எம்.எஸ்.எவ் நிறுவனம் ஆற்றிவந்த மருத்துவப் பணியினை இம் மாதத்துடன் நிறுத்திக் கொள்ளவுள்ளது.

இருப்பினும் மகப்பேறு உட்பட சகல சிகிச்சைகளும் வழமை போல் இடம்பெறும் என மல்லாவி வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (07)

## எரிபொருளின் அளவை இராணுவம் மட்டுப்படுத்துகிறது

### கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் தெரிவிப்பு -

(கிளிநொச்சி)

கரைச்சி வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எடுத்துவரும் எரிபொருளின் அளவினை சிறிலங்கா இராணுவம் மட்டுப்படுத்தியுள்ளதாக கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் கூறியுள்ளார்.

இதனால் பரந்தன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகத்தின் அளவு மட்டுப்படுத்தப்பட்டு ஒருவருக்கு ஒரு லீற்றர் வீதம் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### வவு. நலன்புரி நிலையத்தில் இருந்து

## மீள்குடியேற்றத்திற்கு 210 பேர் யாழ். அனுப்பிவைப்பு!

(வவுனியா)

வவுனியா மாவட்ட நலன்புரி நிலையங்களிலிருந்த யாழ். மாவட்ட மக்கள் மீள் குடியமர்வுக்காக கடந்த புதன்கிழமை அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பூந்தோட்டம், சிதம்பரபுரம், நெளுக்குளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் பல காலமாகத் தங்கியிருந்த பொதுமக்களில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 210 பேர் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.



கரடியனாறில் நடைபெற்ற அதிகாரிகள் பயிற்சி பெற்றபோராளிகளுக்கு சான்றிதழ்வழங்கும் நிகழ்வில் தளபதிகள் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொள்கின்றனர்.

## தமிழீழ வைப்பக...

தின் கொடியை தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

சிறப்புரையினை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நிகழ்த்தினார். வைப்பகத்தின் பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரைநீக்கம் செய்து வைத்தார். தமிழீழ வைப்பகத்தின் புதிய கட்டடத்தினை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் திருமதி அடேல் பாலசிங்கம், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன், விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் போராளிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (பா)

## உரிமை கோரப்படாத சடலம்!

(மல்லாவி)

மல்லாவி வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத நிலையில் சடலம் ஒன்று உள்ளது. மாணிக்கம் சவரிமுத்து (வயது- 52 ஆண்) என்பவர் காய்ச்சல் காரணமாக நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்டு மாலை 3.30 மணியளவில் இறந்துள்ளார்.

இவரைப் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் அருகில் உள்ள காவல் பணிமனை ஊடாக துணுக்காய் காவல் பணிமனை யுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (07)

## பயிற்சி பெற்ற...

வில் கலந்து கொண்டு பட்டிகளை அணிவித்தனர்.

நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிருஸ்ணபிள்ளை, சந்திரநேரு, அரசாங்க உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## - உலகக்கிண்ணப் போட்டி -
# நியூசிலாந்து இந்தியாவிடம் ஏழு விக்கேட்டுக்களால் தோல்வி



தென்னாபிரிக்கா செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் நேற்று நிறைவு பெற்ற இந்திய நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான உலகக்கிண்ண இறுதி 'சுப்பர்சிக்ஸ்' போட்டியில் இந்தியா ஏழு விக்கெட்டுக்களால் நியூசிலாந்து அணியைத் தோற்கடித்துள்ளது.

147 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்தியஅணி 40.4 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இவ் வெற்றி பெறப்பட்டது. முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா நியூசிலாந்தை துடுப்பெடுத்தாட அழைத்தது. இதற்கமைய ஆட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து இந்திய பந்துவீச்சாளர்களுக்கு முகம் கொடுப்பதில் சிரமத்தை எதிர்நோக்கி 45.1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. வேகப்பந்து வீச்சாளர் சகீர்ஹானின், முதலாவது ஓவரின் இரண்டாவது மூன்றாவது பந்து வீச்சில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்த நியூசிலாந்து அதன் பின் ஓட்டம் பெறுவதில் பின்னடைவு கண்டது.

அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் 30, ஜெக்கப் ஓரம் 23, கிறிஸ்கெயின் 20 ஓட்டங்களை முறையே பெற்று துடுப்பாட்டத்தில் ஓரளவு பிரகாசித்தனர். பந்து வீச்சில் சகீர்ஹான் 42 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களை வீழ்த்தி வெற்றிக்கு வழிசமைத்ததுடன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். இந்தியா சார்பில் துடுப்பாட்டத்தில் முகமட்ஹைப் 68,ராவிட் 55 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காது பெற்று வெற்றியை உறுதியாக்கினர்.

இப்போட்டியில் இந்திய அணி நியூசிலாந்தை தோற்கடித்ததன் மூலம் அவ்வணிக்கான அரையிறுதிப்போட்டிக்கான வாய்ப்பு பெரும்பாலும் அற்றுப் போயுள்ளது இது இன்றைய சிறிலங்கா, சிம்பாவே போட்டி மூலம் உறுதியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நிரந்தர நியமன...

இதில் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். பேரணிகளின் முடிவில் கோரிக்கை மகஜர்கள் சிறிலங்காப் பிரதமருக்கும், சிறிலங்கா சனாதிபதிக்கும், கல்வி அமைச்சருக்கும், மாகாண கல்வி அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப் பட்டன.

கிளிநொச்சியில் மத்திய கல்லூரி முன்பாக இருந்து ஆரம்பமான பேரணி கிளி. அரச செயலகம் வரை இடம்பெற்றது.

கண்டாவளை கோட்டத்தில் முல்லை வீதியில் பெரியகுளம் சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணி கண்டாவளைப் பிரதேச செயலகம் வரை சென்றடைந்து மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

முல்லைத்தீவில் ஆலடிச் சந்தியில் இருந்து காலை 10.30 மணிக்கு ஆரம்பமான பேரணி முல்லை அரச அதிபர் செயலகம் வரை இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற மடுக்கல்வி வலயத்திலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.15 மணிக்கு நெடுங்கண்டல் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் மடு வலயத்தில் 36 பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற தொண்டராசிரியர்களின் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

காமினி வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பித்த பேரணி மாவட்டச் செயலகத்தில் முடிவடைந்து அங்கு வைத்து கோரிக்கை மகஜரும் கையளிக் கப்பட்டது. (10,20,சோ)

## சந்திரிகா...

ஆரம்பிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பில் மீண்டும் சோதனைச் சாவடிகளை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

## சிங்களவர்களுக்கு...

வாகிவிட்டது.

தமிழர்களுக்கு என்று அங்கே ஒரு தனியரசு இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அங்கே ஒரு காவல்துறை இருக்கின்றது. தமிழர்களுக்கு என்று ஒரு இராணுவக் கட்டமைப்பு இருக்கின்றது. அவர்களுக்கு என்று பல நிர்வாக அலகுகள் இருக்கின்றன. அவர்களுக்கு என்று ஒரு வங்கி இருக்கின்றது. தமிழீழ வைப்பகம் இருக்கின்றது. ஒரு அரசிற்கு எத்தகைய நிர்வாக அலகுகள் தேவையோ அந்த அலகுகள் எல்லாம் தமிழர் தாயகத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே அங்கு ஒரு தனி அரசு இருக்கின்றது.

பேச்சுவார்த்தைகள் நடக்கலாம், போராட்டங்கள் நடக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால் தமிழர்களுக்கு என்று ஓர் அரச நிர்வாகம் இருக்கின்றது. அந்த நிர்வாகத்திற்கு ஒரு தலைமை இருக்கின்றது. இப்படி விபரமாக ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அப்படியென்றால் என்ன குறைபாடு இருக்கின்றது என்று சொன்னால்- தமிழர்களுக்கு - என்ன தேவை என்று சொன்னால் ஒரு சில பகுதிகள் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசம், மற்றுமொரு சில நகரங்கள் சிறிலங்கா இராணுவத்தினரிடம் உள்ளன. அவற்றை மீட்டெடுக்க வேண்டும்.

அப்படி மீட்டெடுத்தால் ஒரு முழுமையான தமிழர் அரசு வட-கிழக்கில் உருவாகும். அடுத்ததாக முக்கியமாக சர்வதேச அங்கீகாரம் எமக்குத் தேவை.

இவை இரண்டும் தான் இவர்களுக்குத் தேவை. வேறு ஒன்றும் தேவையில்லை, என்று அக்கட்டுரையில் அவர் விளக்கமாகக் கூறியிருந்தார்.

நான் ஒரு சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றைத் திறந்து வைத்தேன். இப்பொழுது இங்கு பச்சிலைப் பள்ளி தமிழீழ வைப்பகத்தை திறந்து வைக்கவுள்ளேன். இதில் இருந்து ஒரு உண்மை நிலை எனக்கு புரிகின்றது. என்னவென்று சொன்னால் எமது நிர்வாக அலகுகள் பலப்பட்டு வருகின்றன.

யுத்தம் நடந்தாலும் சரி, சமாதான சூழ்நிலை என்றாலும் சரி எமது நிர்வாகம் தொடர்ந்து இங்கு இருக்க வேண்டும். எமது நிர்வாகம் தொடர்ச்சியாகப் பலப்பட்டு வரவேண்டும். எமது நிர்வாக அலகுகளில் மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும். சரி, பேச்சுவார்த்தையை ஏன் நடத்துகின்றீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். இந்தப் பேச்சுவார்த்தையை நாங்கள் நடத்துவதற்கு காரணம் இருக்கின்றது. இந்தப் பேச்சுவார்த்தை நடத்த ஒரு காரணம் என்னவென்றால் எங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் வேண்டும். சரி, நாங்கள் சமஷ்டி பற்றி பேசுகின்றோம் என்று வைத்துக் கொள்ளுவோம். எங்களைப் பொறுத்தவரை - தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் இரண்டு நிலைமை சாத்தியம். தமிழீழ அரசு அல்லது தமிழீழ சமஷ்டி அரசு, இவ்விரு தீர்வு சாத்தியப்பாடாக இருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். இந்த இரண்டு தீர்வையும் தவிர வேறு மாற்று வழி எமக்கு இல்லை.

அப்படிப் பார்க்கப்போனால் தமிழீழ சமஷ்டி அரசு இங்கு உருவாகுவதற்குச் சிங்களவர்கள் அதற்கு இணங்க வேண்டும். எம்மைப் பொறுத்த வரையில் அப்படியான சிந்தனை சிங்கள தேசத்தில் இல்லை. அதாவது தமிழ் மக்களை வரவேற்று அவர்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கி அவர்களது தாயகத்தில் அவர்கள் நிம்மதியாக, கௌரவமாக, சுதந்திரமாக தம்மைத் தாமே ஆளும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற அந்த உணர்வு சிங்களவரிடம் இல்லை. ஆகவே சிங்களவர்களுக்கு ஒரு இறுதியான சந்தர்ப்பம் வழங்கப்பட்டு இருக்கின்றது. நான் உறுதியாகச் சொல்லுவேன். இது இறுதியான சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்று தமிழ் மக்களுக்கு தமது தாயகத்தை, ஒரு சுயாட்சி அதிகாரமுடைய நிர்வாகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இல்லாது போனால் இன்றைய புலிகளின் நிர்வாகம் ஒரு தனியரசாக மாறுவதை எவராலும் தடுக்க முடியாது. இந்த உண்மை நிலையை உங்களுக்குக் கூறி வைக்கின்றேன். (பா)


## வேலை வாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு

கிளி. ஜெயந்திநகரில் அமைந்துள்ள சமுதாய முன்னேற்ற நிலையத்திற்குத் தகுதி வாய்ந்த கணினி இயக்குநர் தேவைப்படுவதால் தகுதியானவர்கள் எதிர்வரும் 17.03.2003 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தங்கள் வசமுள்ள தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆகக் குறைந்த தகுதியாக : M.S. Office உடன் தமிழ், ஆங்கிலம் தட்டச்சு.

சமுதாய முன்னேற்ற நிலையம்,
ஜெயந்திநகர்.
கிளிநொச்சி.

(2272)

## நினைவஞ்சலி

**அமரர். ம. சின்னத்துரை**

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி. இ. சிவானந்தம் அவர்களின் அன்புத் தந்தையார் திரு.ம.சின்னத்துரை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, அன்னாரின் 31 ஆம் நாள் நினைவில் நாமும் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
கிளி.கிளிநொச்சி ம.வி,
கிளிநொச்சி.

(3024)

தீபா குமரேஷ்' ன்

# புரிதல்

(சிறுகதைகளின் தொகுதி)

## வெளியீட்டு விழா

காலம்: 2003.மார்ச்.15 (சனிக்கிழமை)

இன்று மாலை - 3.30

"அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்" (3019)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.